**செய்தி வெளியீடு எண்: 03/10/2020** **நாள்: 19.10.2020**

**பத்திரிக்கைச் செய்தி**

**சென்னை பெருநகர மாநகராட்சி தொடக்கப்பள்ளி சுவரில் மெட்ரோ இரயில் ஓவியம் தீட்டியதற்காக தலைமை ஆசிரியை மற்றும் ஓவியர்கள் கௌரவிக்கப்பட்டனர்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் எப்போதும் நிலையான மற்றும் திறமையான போக்குவரத்து முறையையும், சென்னை பொதுமக்களின் நலனுக்காக பல தனித்துவமான வசதிகளையும் வழங்கி வருகிறது.

சென்னை எண்ணூர், அன்னை சிவகாமி நகரில் உள்ள சென்னை பெருநகர மாநகராட்சி தொடக்கப்பள்ளி சுவரில் மெட்ரோ இரயில் போன்று ஓவியம் வரைந்துள்ளனர். பள்ளி அலுவலக அறை மெட்ரோ இரயில் நிலையம் போன்றும், வகுப்பறைகள் மெட்ரோ இரயில் பெட்டிகள் போன்றும், வகுப்பறை வாசல்கள் மெட்ரோ இரயில் பெட்டியின் நுழைவு வாயில்கள் போன்றும் வண்ணம் தீட்டப்பட்டுள்ளது. சமீபத்தில் இது சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கவனத்திற்கு வந்தது.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரதீப் யாதவ் இ.ஆ.ப., அவர்கள் பள்ளியின் தலைமை ஆசிரியை திருமதி. த. வெற்றிச்செல்வி, ஒப்பந்ததாரர் திரு. பி. சரவணகுமார் மற்றும் ஓவியப்பணி மேற்கொண்ட திரு. ஜே. சுரேஷ்பாபு ஆகியோரை கௌரவித்து வெகுமதி மற்றும் நற்சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜீவ் நாராயண் திவேதி (திட்டங்கள்), மற்றும் தலைமைப் பொது மேலாளர் (மனித வளம்) திரு. ஜி. ராஜரத்தினம் ஆகியோர் உடன் இருந்தனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை - 600107**